

திருக்கோணேஸ்வரர்
தொன்மையும் வண்மையும்



SOUTH ASIAN BOOKS * COLOMBO 11 *

உ

ஓம் சிவாயநம.

# திருக்கோணேஸ்வரம்
# தொன்மையும் வண்மையும்



## திரிகோணமலைத் தேவாரம்

நிரைகழ லரவம் சிலம்பொலி அலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடலோதம் நித்திலங் கொளிக்கும்
கோணமாமலை அமர்ந்தாரே.

★★★★


ஆக்கம்

சைவப்புலவர் - பண்டிதர்

**இ. வடிவேல் அவர்கள்**

திருக்கோணமலை



1992



## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | :- | திருக்கோணேஸ்வரத் தொன்மையும் வன்மையும். |
| நூலாசிரியர் | :- | ஞானசிரோன்மணி - பண்டிதர் இ. வடிவேல். |
| வெளியீடு | :- | திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை. |
| முதற்பதிப்பு | :- | 1995 வைகாசி |
| பக்கம் | :- | 130 |
| பிரதிகள் | :- | 1000 |
| அச்சகம் | :- | ஜெய்ஷான் பிரின்ட், 98, பி. இரத்தினம் வீதி, கொழும்பு - 13. |
| விலை | :- | ரூபா 80/- |

# ஆசியுரை


திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்
தேவஸ்தான ஆதீனகர்த்தா - வேதாகம மாமணி

**பிரதமகுரு ஸ்ரீ சோ. இரவிச்சந்திர
குருக்கள் அவர்கள்**


சர்வ வல்லமையுடைய ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் பத்ம பாதங்களை இதயத்தில் ஆவர்த்தனம் செய்து எல்லாம் வல்ல மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமானுடைய திருவடிகளைத் தியானம் செய்து ''கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும்'' என்னும் இந்த அரிய ஆராய்ச்சி நூலையும்; நூலாசிரியர் சைவப்புலவர் — பண்டிதர். திரு. இ. வடிவேல் ஐயா அவர்களையும் மனப்பூர்வமாக இதயசுத்தியுடன் முதற்கண் ஆசீர்வதிக்கின்றேன்.

இந் நூலைப் படித்துப்பார்த்தபோது நூலில் அடங்கியுள்ள அரும்பெரும் விஷயங்களைக் குறிப்பிடுவதற்கு முன் நூலையும், நூலாசிரியரையும் ஆசீர்வதிக்கும்படி எனது அடியுள்ளத்திலிருந்து ஏதோ ஒரு சக்தி உந்துகிறதை உணர்ந்தேன்.

பண்டிதர் அவர்கள் இதற்குமுன் நான்கு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். எல்லா நூல்களும் ஆலயங்களைப்பற்றியும் இறைதத்துவங்களைப்பற்றியும், சாஸ்திர, தோத்திர, புராண, இதிகாசங்களைப்பற்றியும் ஆத்மீக நெறிகளையுமே கூறுவதாக அமைந்துள்ளது இந்நூலாசிரியரின் நுண்மாண் நுழைபுலம் தெய்வீக சம்பந்தப்பட்ட விஷயங்களையே அணுகி அனைந்து அனுபவித்துக்கொண்டிருப்பதை அவருடைய நூல்களில் காணக்கூடியதாயிருக்கின்றது.

திருஞானசம்பந்தர் தேவாரத் திருப்பதிகம் பாடித் துதித்த தெட்சணகயிலாயமாகிய திருக்கோணேஸ்வரம் என்னும் திவ்விய சிவக்ஷேத்திரத்தோடு அத்துவிதமாகக் கலந்துள்ள இந்நூலா

சிரியரின் இதயத்தில் மலர்ந்த ஆராய்ச்சி அறிவையும், அனுபவ உணர்வினையும் இந்நூலில் உள்ளங்கை நெல்லிக்கனி போலக் காணக்கூடியதாயிருக்கிறது.

வரலாற்றுப் பெருமைமிக்க திருக்கோணேச்சரத்திலிருந்து அன்னியரால் அழிக்கப்பட்ட மூன்று ஆலயங்களின் வடிவமைப்பையும், அவைகள் இருந்த இடங்களையும் புராண, இதிகாச சரித்திர ஆதாரங்களோடு கண்டறிந்து ஆசிரியருடைய அந்தராத்மாவில் பிரகாசிக்கும் அற்புதமான அகக்காட்சியையும் ஒருங்கிணைத்துத் தொன்மைவாய்ந்த மூன்று ஆலயங்களையும் பிரத்தியட்சமாக இந்து மக்களுக்கு அருள்விருந்தாக வழங்கியுள்ளார்.

இந்நூல் ஓர் அற்புதப் படைப்பு. ஆச்சரியமான படைப்பு. கடல்கோளினால் அழிந்துபோன லெமோரியாக்கண்டத்து இந்து சமய, நாகரீக வரலாறுகளைத் தொட்டெடுத்து குளக்கோட்டு மன்னனுடைய திருப்பணி வரலாறுகளையும், போத்துக்கேசர் முதலிய அன்னியர்களால் அழிவுசெய்யப்பட்ட கோணேசர் கோவில் வரலாறுகளையும், தற்போதமைந்துள்ள கோணேசர் ஆலயத்தின் புதிய வரலாறுகளையும் காய்தல் உவத்தலின்றி நடு நின்று ஆய்வுசெய்து படைக்கப்பட்டுள்ள இந்நூல் வருங்கால மக்களுக்கு மிகவும் பயனுள்ள பொக்கிஷமாகும்.

இந்நூலைப் படைத்தளித்த பண்டிதர் = சைவப்புலவர். திரு. இ. வடிவேலனார் அவர்கள் திருக்கோணமலையில் கோயில்கொண்டருளியுள்ள ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுடைய கிருபாகடாட்சத்தினாலும், மாதுமையம்பாள் சமேத கோணேசப்பெருமானுடைய அருட்சக்தியினாலும் பல்லாண்டு வாழ்க. ''திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வரலாறும்'' அனைவருக்கும் பயன்படும் அரும்பொருளாய் ஓங்குக.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

உ

# ஆசியுரை

திருக்கோணமலை அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமார சுவாமி
தேவஸ்தான பிரதமகுரு - வேதாகம மாமணி

**பிரம்மஸ்ரீ இரா. இராஜேஸ்வரக் குருக்கள்**
**அவர்கள்**

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை யமர்ந்த கோணேசர் கோயில் திருஞானசம்பந்தராலும் அருணகிரிநாத சுவாமிகளாலும் பாடல்பெற்ற சிறப்புமிக்க சிவஸ்தலம். இதன் தொன்மையையும், வன்மையையும்பற்றி சைவப் புலவர் - பண்டிதர். இ. வடிவேல் அவர்கள் பலகாலம் முயன்று ஆய்வுசெய்து, அதன்மூலம் தமது அகக்கண்ணில் கண்ட காட்சிகளை எமக்கு. கண்ணுக்கும், காதுக்கும் எட்டாத பல உண்மைச் சம்பவங்களைத் திரட்டி இந்நூலில் தந்துள்ளார்.

இந்நூலாசிரியர் திரு. இ. வடிவேல் அவர்கள் கோணேஸ்வரத்தின் தொன்மையைக் காண்பதில் ஒரு யோகியாகவும், அதன் வன்மையைக் காட்டுவதில் ஒரு போகியாகவுமிருந்து வரலாற்றுக்கு அப்பாற்பட்ட தொன்மையும், உண்மையும், தெய்வீகச் சிறப்புள்ள வன்மையுமுடைய இக் கோணேஸ்வரத்தின் புராண வரலாறுகள், கல்வெட்டுக்கள், சுற்சாசனங்கள், ஏட்டுச்சுவடிகள் போன்றவற்றை நுணுக்கமாக ஆராய்ந்து மறைந்துபோனவற்றையும், மறைக்கப்பட்டவற்றையும் துணிச்சலோடும் தக்க ஆதாரங்களோடும் வெளிக்கொணர்ந்த பண்டிதர் அவர்களைச் சைவ நல்லுலகம் பாராட்டாமல் இருக்க முடியாது.

இவர் அரை நூற்றாண்டிற்கு மேலாக கோணேஸ்வரத்தோடு ஐக்கியப்பட்டிருந்த அநுபவ அறிவினாலும், தெய்வீக உணர்வினாலும், அன்னியரால் அழிக்கப்பட்ட மூன்று கோயில்களையும் தமது மனக்கண்ணிலே படம் பிடித்து எமக்கு அத

னைக் காட்டியுள்ளார். சிவபூமியெனச் சிறப்பித்துப் பேசப்படும் திருக்கோணமலையே தெட்சிண கைலாயம் என்பதையும் நிரூபித்து, போத்துக்கேயரால் அழிக்கப்பட்ட ஆலயங்களைச் சைவ உலகிற்கு அறிமுகம் செய்துள்ளார். கோணேஸ்வரத்தை அழித்தமையாற் போலும், போத்துக்கேயரது நாடு பல தடவைகளில் இயற்கை அழிவுகளை எதிர்நோக்குகின்றது. கோணேசப்பெருமான் அமர்ந்தருளியுள்ள சிவ க்ஷேத்திரத்தை அழிப்பவர்களையும், அழிக்க நினைப்பவர்களையும் தெய்வம் என்றோ ஒருநாள் தண்டித்தே தீரும்.

கி. பி. 1624 ஆம் ஆண்டு கோணேசர் கோயில் போத்துக்கேசரால் அழிக்கப்பட்டது 1963 ஆம் ஆண்டு புதிய ஆலயம் அமைக்கப்பெற்று மகாகும்பாபிஷேகம் நிறைவேறியது. கும்பாபிஷேகத்தின் பின் முதன்முதலாக இவ்வாலயத்தின் வரலாற்றிலேயே மஹோற்சவம் (கொடியேற்றம்) செய்த பெருமை எனது தந்தையார் பிரம்மஸ்ரீ. வெ. இராஜாமணிக் குருக்கள் அவர்களையே சாரும். அவருடைய மகனாகிய யான் இந்நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமைப்படுவதோடு, இந்நூலாசிரியர் சைவப்புலவர் - பண்டிதர் இ. வடிவேல் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து இன்னும் மறைபொருளாகவுள்ள எமது ஆலய வரலாற்றுப் பொக்கிஷங்களை வெளிக்கொணர மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமானையும், முத்துக்குமரனையும் பிரார்த்தித்து என் மனமுவந்த ஆசிகளை வழங்குகிறேன்.

" லோகா சமஸ்த சுகினோ பவந்து "

உ

# அணிந்துரை

ஓய்வுபெற்ற பிரதி அதிபர்

**திருமதி. பாலேஸ்வரி - நல்லரெட்ணசிங்கம்**

**அவர்கள்**

(தலைவி: திருக்கோணமலை இந்து மகளிர் மன்றம்)

சைவப்புலவர் - பண்டிதர். திரு இ வடிவேல் அவர்கள் எழுதிய '' திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வன்மையும் '' என்னும் நூல் ஆசிரியரது ஐந்தாவது படைப்பாக வெளிவருகிறது என்பதை எண்ணும்போது உண்மையாகவே மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

கற்பனை இருந்தால் கதை எழுதிவிடலாம். அதனை ஆசிரியர் தன் விருப்பப்படி எழுதிவிடலாம். ஆனால் வரலாறுகள் அப்படியல்ல. உண்மைச்சம்பவங்களாக, ஆதாரபூர்வமாக எழுதப்படவேண்டும். இதற்கு ஆராய்ச்சி தேவை, உடல் உழைப்போடு, மனமும் நிர்ப்பந்தியும், விவேகமும் ஒன்றுபட்டு உழைத்தால்தான் இப்படியான ஒரு சிறந்த ஆராய்ச்சி நூலை எழுத முடியும்

இந்து சமயத்துக்கு, திருக்கோணமலையைச் சார்ந்த இந்து சமய ஆராய்ச்சிக்கு ஆசிரியர் ஆற்றும் தொண்டு மகத்தானது.

திருக்கோணமலையின் தொன்மைபற்றி எழுதும்போது ஆசிரியர் அவர்கள் அஞ்சா நெஞ்சத்துடன் பல உண்மைகளை அப்பட்டமாக எழுதியுள்ளார். அன்னாரின் துணிவு வரவேற்கத்தக்கது

கி.பி. 1624 ஆம் ஆண்டு கோணேசர் ஆலயத்தை இடித்தழித்த போர்த்துக்கேய தளபதி கொன்ஸ்ரன்டைன் டிசா பற்றிய குறிப்புக்களும், சேர் எமெசன் ரெனன்ற் எழுதிய இலங்கைச்சரித்திரம் இரண்டாம்பாகம் 484 - 485 பக்கங்களில

காணப்படும் செய்திகள், கி.பி. 1890 இல் ஹென்றி டப்ளியூ கேவ் எழுதிய இலங்கை என்னும் நூலில் காணப்படும் குறிப்புகள், திருக்கோணமலையை நேரில் பார்வையிட்ட கத்தோலிக்க மதபீடத்தின் முதன்மை பெற்றவர்களில் ஒருவரான பரிசுத்த பிரான்சிஸ் சவேரியாரின் ''இலங்கையிற் கத்தோலிக்கமதம் வளர்ந்த வரலாறு'' என்ற நூலில் ''கீழைத்தேச மிலேச்சர்களின் உரோமாபுரி திருக்கோணமலை'' என்று காணப்படும் குறிப்புகள் ஆகியன திருக்கோணேஸ்வரத்தின் தொன்மைபற்றி விளங்காதவர்களுக்கும் விளங்கக்கூடிய விதத்தில் தெளிவாக்கப் பட்டுள்ளது. இவற்றை விளக்கக்கூடிய விசேட படங்களும் நூலில் இடம்பெற்றிருப்பது சிறப்பம்சமாகும்.

கி.பி. 1979 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஸ்ரீ லங்கா அரசுகள் அமைத்த கட்டிடங்களையும், அதேயாண்டில் இலங்கை இராணுவத் தரைப்படை பிரிவொன்று தமது வழிபாட்டுக்காகக் கட்டிப் பின்னர் பெரிதாக எழுப்பிய பௌத்த விகாரை புத்தர் சிலை என்பனவற்றையும் மூற்றாக அகற்றிவிட்டால் நமது அகக்கண்ணுக்கும், புறக்கண்ணுக்கும் தோற்றமளிக்கும் மலைப்பகுதியே கோணேஸ்வரமாகும்'' என்று ஆசிரியர் எழுதிய குறிப்பைப் படிக்கும் போது ஆசிரியரின் உள்ளக் குமுறலை மட்டுமல்ல எமது உள்ளக் குமுறலையும் உணர முடிகிறது.

கந்தளாய்க்குளம் கட்டிய குளக்கோட்டு மன்னன், அதற்கு உதவிபுரிந்த அரசி ஆடகசௌந்தரி போன்றோரின் வரலாறுகள் தற்போது திரிபுபடுத்தப்பட்டு சிங்கள மன்னர்கள் கட்டியதாகக் கூறப்படும் செய்தியாதியன மனவேதனைக்குரியன.

புவனேகவீரபாண்டியன் பொறித்த வெற்றிச்சின்னமான இரு கயல்மீன் இலச்சனை (தற்போது கோட்டை வாயிலின் இருபக்கத் தூண்களிலுமுள்ளவை) கோட்டையினுள்ளே சுவரில் வைத்துக் கட்டப்பட்டிருக்கும் இடிக்கப்பட்ட கோணேசர் ஆலயத்தின் கல்வெட்டுக்கள் போன்ற எடுத்துக்காட்டுகள் நூலுக்கு அழகூட்டுகின்றன.

போர்த்துக்கேய சரித்திர நூலாசிரியர் டீ குவைறோஸ் பாதிரியார் அவர்களின் கூற்றாகிய ''பூரிஜெகன்னாத்திற்கும் இராமேஸ்வரத்திற்கும் போய் தெரிசனம் செய்து வரும் யாத்திரிகர்களிலும் பார்க்க மிக அதிகமானோர் இவ்வாலயத்தைத் தரிசிக்க வருகின்றனர்'' என்பனபோன்ற குறிப்புகளும் ஆதாரத்துடன் விளக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் புதைபொருளாராய்ச்சித்துறை நிறுவனத்தின் தலைவராயிருந்த திரு. பரணவிதான அவர்கள்

தமது ஆராய்ச்சியின்போது வேறெங்கோ ஓரிடத்தில் கண்டெடுக்கப்பட்ட தங்க ஏட்டில் கோகர்ணவிகாரைபற்றி இருந்த குறிப்புக்களை ஒரு ஆங்கிலத் தினசரியில் பல வருடங்களுக்கு முன் வெளியிட்டிருந்தார். அச்செய்தியை இலங்கை அரசாங்கம் இருட்டடிப்புச் செய்துவிட்டது ஏன்? என்பதை வாசகர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். திரு. பரணவிதான அவர்கள் உண்மையை வெளிப்படுத்தியதை அரசாங்கம் வரவேற்கவில்லை. இன மதத் துவேஷமே இதற்குக் காரணமாயிருந்தது. என்று ஓரிடத்தில் குறிப்பிட்டிருப்பதும், இலங்கை சுதந்திரமடைந்த பின் ஆட்சியாளர்களின் தந்திரோபாயங்களுக்கும், கௌரவங்களுக்கும் தன்மானத்தையும் சுயசிந்தனையையும் இழந்த சைவப் பெரியார்களின் தாராள மனப்பான்மையால் சைவாலயங்களின் வரலாறுகள் குழப்பநிலை அடைந்திருக்கின்றன. கதிர்காமத்துக்கும், வதுளைக் கதிரேசன் கோவிலுக்கும் மற்றும் பல இந்துக் கோயில்களுக்கும் நேர்ந்த கெதி திருக்கோணேஸ்வரத்துக்கும் வரவேண்டுமா? என்ற நிதர்சன உண்மைகளைக் கூற ஆசிரியரைவிட வேறு எவருக்கும் துணிவு வராது.

டாக்டர் பாலேந்திரா, திரு. மு. சிவப்பிரகாசம், திரு. செ. குணசிங்கம், பி. ஏ. (வரலாற்றுத்துறைப் பேராசிரியர்) ஸ்ரீமான் வே. அகிலேசபிள்ளை போன்றோரின் குறிப்புகளும் இந்நூலில் அடங்கியுள்ளன.

கோவிலின் வண்மைபற்றி நிறைய இந்நூலில் இடம்பெற்றுள்ளது. ஆசிரியர் இயற்றிய பாடல்கள் பல ஆலயத்தின் வண்மையைக் கூறுவல்லவை. இவற்றை வாசகர்களையே படித்துச் சுவைக்க விட்டுவிடுகிறேன்.

மொத்தத்தில் "திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும்' ஒரு சிறந்த நூல். ; வரலாற்று உண்மைகள் மறைக்கப்படாமல் தெளிவாக்கப்பட்டுள்ளன. 1831ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் திகதி இலங்கை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கோணேசர் கல்வெட்டு பற்றிய ஒரு ஆங்கிலச் செய்தியும் நூலின் சுற்றில் தரப்பட்டுள்ளது.

கோணேஸ்வரத்தின் தொன்மையும் வண்மையும் கூறும் நூல்களும், ஆகச்சான்றுகளும் என்ற தலையங்கத்தின் கீழ் முப்பத்தொரு நூல்களின் பட்டியலும் தரப்பட்டுள்ளது. இது மிகவும் சிறந்த ஒரு ஆராய்ச்சி நூல் என்று கூறி பண்டிதர் — சைவப்புலவர் திரு. இ. வடிவேல் அவர்கள் இன்னும் பல வருடங்கள் சுகதேகியாக வாழ்ந்து இப்படியான இன்னும் பல சிறந்த நூல்களைத் தரவேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

உ

சிவமயம்

# அணிந்துரை

K. Chitravelu

(Retired)

(Admn : Officer / Registrar, High Court)

சைவ சமுதாயத்தின் நன்மதிப்பிற்குரிய சைவப்புலவர், திருமுறைச் செல்வர் பண்டிதர் திருவாளர் வடிவேல் அவர்களின் "திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும்" என்னும் நூல் சைவ உலகிற்கும், குறிப்பாகத் திருக்கோணமலை மாவட்ட சிவனடியாருக்கும் கிடைத்த ஓர் அரிய படைப்பு. ஏற்கனவே, முன்னோடியாக "கோணேசர் கோவில் வரலாறு" என்னும் நூலை ஆக்கி, அதனூடே இத்திருத்தலத்தின்கண் அமைந்திருக்கும் மூர்த்திகள், கோவில்கள் பற்றியும், மற்றும் சில சரித்திரபூர்வ விபரங்களையும் சுருக்கமான முறையில் கூறியிருக்கின்றார் பண்டிதர் அவர்கள். இந்நூலை உற்று நோக்கியவிடத்து ஆசிரியரின் உள்ளத்தில் "கோணேஸ்வரம்" ஆழமாகக் குடிகொண்டிருப்பதையும், அதன் ஒளிமயம் இத்தோடு நின்றுவிடாமல் வெகுவிரைவில் சுடர்விட்டுப் பிரகாசிக்குமென்பதையும் உணரக்கூடியதாயிருந்தது. அவ்வுணர்வு வீண்போகவில்லை! இன்று "திருக்கோணேஸ்வரம்" தொன்மையையும், வண்மையையும் உறுதுணையாகக்கொண்டு, சைவத் தமிழ் கூறும் நல்லுலகில் தன் ஒளிக்கதிர்களைப் பரப்பி விட்டது.

திருக்கைலைப் பெருமானின் திருவுளப்படி வாயுதேவனால் கைலை மலையினின்றும் பெயர்த்தெடுக்கப்பட்டு, இங்கு ஸ்தாபிக்கப்பட்ட திரிகூட மலைச்சிகரமே தட்சிண கைலாயம் என்று போற்றப்படும் திருக்கோணேஸ்வரம். இது "தட்சிண கைலாய மகாத்மியம்" என்னும் சமஸ்கிருத நூலின் கூற்று. இந்நூலில் இதைச் சுட்டிக்காட்டி, ஆதாரமாக இன்னும் பல புராண, இதிகாச, திருப்பதிக செய்யுட் கூற்றுகளையும் தொகுத்தெடுத்து விளக்கியுள்ளார் பண்டிதர் அவர்கள். மேலும், அறிவாளர்களின் கருத்துக்களை ஆராய்ந்து, உத்தர தட்சிண கைலாய சேத்திரங்களின் ஒருங்கமைப்பு பற்றி,

பூகோள, பௌதிக, விஞ்ஞான ரீதி வழியாக ஒற்றுமை காண, பண்டிதர் அவர்கள் பின்பற்றிய வழி துறைகள் பாராட்டத் தக்கனவாகும்.

அடுத்தபடியாக, பண்டிதர் அவர்கள் சேகரித்த சரித்திர வரலாறுகள், அறிஞர்களின், அறிக்கைகள் மற்றும் கற்சாசனங்களின் விபரங்கள், திருக்கோணேஸ்வரத்தின் தொன்மையையும், போர்த்துக்கீசரால் அழிக்கப்படமுன்னர், இத்திருத்தலம் கொண்டிருந்த சிறப்பையும் ஆணித்தரமாக உறுதிப்படுத்துவதைப் பண்டிதர் அவர்கள் தெளிவாக விளக்கியிருக்கின்றார்கள். போர்த்துக்கேய பாதிரியார் குவைறோஸ் அவர்கள், தமது அறிக்கையிற் குறிப்பிட்ட மூன்று வானளாவிய கோபுரங்களுடன் கூடிய ஆலயங்களுடன், ஆதி காலத்தில் இத்திருத்தலம் கொண்டிருந்த அற்புதமான நிலை ஆகியவை, பண்டிதர் அவர்களின் அகக் கண்ணிற்றோன்றிய வர்ணனையில் படங்களுடன் அழகாகப் பிரதிபலிக்கப்படுகின்றன.

இத்துணை ஆதாரங்களையும், சரித்திர வரலாறுகளையும் பெற்றிருக்கும் திருக்கோணேஸ்வரத் தலத்திற்கு நேர்ந்துகொண்டிருக்கும் தடைகளும், இடையூறுகளும், பண்டிதரின் மனதில் கலக்கம் உண்டாக்குவதை அவதானிக்கக்கூடியதாயிருக்கின்றது. அன்னார் இவை தொடர்பாக நடக்கும் சில வஞ்சகமான, நேர்மையற்ற செயல்களைத் துணிகரமாக வெளிப்படுத்தியிருக்கின்றார். சரித்திர வரலாறுகளையும், சான்றுகளையும் புறக்கணித்தும், திரித்துக்கூறியும், திரிபு, மருவுதல் என்ற போர்வையில் புராதன இந்து மதத் தலங்களின் பெயர்களை மாற்றியும், அவற்றிற்குரிய இடங்களை ஆக்கிரமித்துக்கொள்ள முற்படும் சக்திகளை என்னென்று சொல்வது? இந்த நயவஞ்சக செயல்களை அறிந்தும் அறியாததுபோல நடிக்கும் அரசின் அசட்டைத்தனம்தானென்ன? இம்மாதிரியான கொள்கை அழிவுக்குத்தான் வழி கோலும்.

" நாடொறு நாடி முறை செய்யா மன்னவன்
நாடொறு நாடு கெடும் "

என்பது பொய்யாமொழி

தூய சிந்தனையோடும், அயராத முயற்சியோடும் தம் வாழ்நாளை இம்மாபெரும் கைங்கரியத்தில் தனிப்பட்ட முறையில் அர்ப்பணித்துக்கொண்டிருப்பவர் எமது பண்டிதர் அவர்கள். அன்னாரின் " திருமலை மாவட்டத் திருத்தலங்கள் " என்னும் முந்திய நூல், ஈழத்தின் சைவ மத மறுமலர்ச்சிக்கொரு

தூண்டுகோலாக அமைந்துள்ளது. இந்து கலாச்சாரப் பாலைவனமாகிய திருமலை மாவட்டத்தில் (Hindu Cultural Desert) இவ்வரிய படைப்பின் பயனாக சைவமக்கள் மத்தியில் பசுமையான, தெய்வத் தன்மையான சிந்தனைத் தளிர்கள் அரும்பியிருக்கின்றனவென்றால் மிகையாகாது. இப்போது கிடைத்திருக்கும் '' திருக்கோணேஸ்வரம் - தொன்மையும் வண்மையும் '' என்னும் அணிகலன் மாவட்டத் திருத்தலங்களின் சிகரமாகிய கோணேஸ்வரத்திற்கு சூட்டிய மணிக்கிரீடமாக அமைகின்றது. முன்னரே குறிப்பிட்டபடி அடியார்களின் அகக் கண் முன்னே, இடித்து அழிக்கப்பட்ட திருக்கோணேஸ்வரம் மீண்டும் முற்றும் நிறைந்த வளப்புடனும், சிறப்புடனும் தோன்றி, தாயினும் நல்ல தலைவரின் திருத்தலம் இதுவேயென்றும், இதுவன்றி வேறொன்றும் இங்கில்லையென்றும், அனைவர் மனத்திலும் அசையாத நம்பிக்கையும், உறுதியும் ஏற்பட வழி வகுத்துவிட்டது இவ்வரிய பொக்கிஷம்.

சற்றில் ஒரு கருத்து ; பண்டிதர் அவர்கள், சைவ மக்களின் வழிபாட்டுத்தலங்கள் பற்றி, குறிப்பாக முக்கிய தலங்களான திருக்கோணேஸ்வரம், தம்பலகமம் ஆதி கோணநாயகர் ஆலயம் எதிர்நோக்கும் இடையூறுகள் பற்றி குறிப்பிட்டிருக்கின்றார். சரித்திர வரலாறுகளும், சான்றுகளும் மறைக்கப்படும் இந்நேரத்தில், மேலும், இவை தொடர்பான ஆராய்ச்சிப் படைப்புக்களும், விளக்கங்களும் வலுவடையவேண்டியது அத்தியாவசியமாகின்றது. ஏற்கனவே, இவ்வரும் பணியை மேற்கொள்ளவேண்டிய பெரும் பொறுப்பு இயல்பாகவே இறையருளால், தானாகவே பண்டிதர் அவர்களின் அகம் புகுவதாயிற்று. தொடர்ந்தும், இத்திருத்தலங்கள் சார்பாக, சைவ சமுதாயம் எதிர்நோக்கும் இன்னல்களைக் களையும் பொறுப்பைப் பண்டிதர் அவர்களே அரனின் ஆணையாக மேற்கொள்ள வேண்டும். இதுவரை அவர்கள் புரிந்த அருஞ்சேவைக்கு நன்றிக் கடன் செலுத்துவதோடு, அன்னாரின் வழிகாட்டலுக்கும், பணிப்புக்கும் அமைந்தவாறு செயலாற்ற திருக்கோணேஸ்வர பண்டைக்காலச் சரித்திர ஆராய்ச்சிப் பணியகம் '' நிறுவி வேண்டிய நிதி, மற்றும் சகல உதவிகளையும் நல்க, திருக்கோணேசராலய சபையும், திருத்தம்பலகாம ஆதிகோணநாயகர் ஆலய சபையும் ஒருங்கிணைந்து, தயக்கமின்றி முன்வரவேண்டுமென்பதே.

'' இதனை இதனால் இவன் முடிக்குமென்றாய்ந்
அதனை அவன் கண்விடல் ''

க ப ம

உ

சிவமயம்

# அணிந்துரை


## திரு. வல்லிபுரம் தங்கராஜா அவர்கள்

தலைவர், திருக்கோணமலை மாவட்ட
இந்து இளைஞர் பேரவை


ஒரு நூல் மனிதன் சிந்தனை செய்வதற்கு துணைநிற்கும் இயந்திரம் என்பது அறிஞர் கருத்தாகும் சைவப்புலவர் பண்டிதர் இ. வடிவேல் அவர்களின் " திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வன்மையும் " என்னும் நூல் இக் கூற்றினை நிரூபிக்கும் விதத்தில் அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது. நீண்ட காலமாக திருக்கோணமலையில் வாழ்ந்து திருக்கோணேஸ்வர ஆலயப் பரிபாலனத்தில் முக்கிய இடத்தை வகித்த இந்நூலாசிரியர் தனது அயராத உழைப்பினாலும் தான் மேற்கொண்ட ஆராய்ச்சியினாலும் இப் படைப்பினை வெளியிடுவதை எம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது.

இந் நூலைப் படிப்பவர்கள் இந்நூலில் பல சிறந்த அம்சங்களைக் காண முடியும். திருக்கோணேஸ்வரத்தின் தொன்மையினை விளக்கும் போது பண்டிதர் அவர்கள் காய்தல் உவத்தலின்றி முடிந்த முடிவுகளிற்கு முன்னுரிமையளிக்கும் விஞ்ஞானியைப் போலவும் உள்ளதை உள்ளபடி எடுத்துக்காட்டும் கண்ணாடியைப் போலவும் குறுக்கு விசாரணை மூலம் சாட்சிகளிடமிருந்து உண்மையைப் பெற முயற்சிக்கும் சட்டத்தரணி போலவும் பல்வேறு கருத்துரைகளிற்கு மத்தியிலும் உண்மையினை பிரித்தறிய முற்படும் நீதிபதி போலவும் செயற்பட்டிருப்பது நூலின் நம்பகத் தன்மையை அதிகரித்துள்ளது.

வரலாற்று நூல்களைப் படைப்போர் பல்வேறு ஆதாரங்களை அடிப்படையாக வைத்துச் செயற்படுவர். அவற்றுள் இலக்கிய சம்பந்தமானவை, கல்வெட்டுக்கள், சாசனங்கள், உலோகம்

நாணயம் சம்பந்தமானவை கலை சம்பந்தமானவை என சிலவற்றை இங்கு குறிப்பிடலாம். அது மாத்திரமல்ல காப்பியங்களும் புராணங்களும் ஒரு சமுதாயத்தின் சமய கலாச்சார வரலாற்றினுக்கு முக்கிய சாதனமாயமையும் என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். இந்த வகையில் சைவப்புலவர் பண்டிதர் இ. வடிவேல் அவர்களின் ''திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வன்மையும்'' என்னும் நூலை உற்று நோக்குமிடத்து இந்நூலின் குறிப்பிட்டுள்ள புராணவரலாறுகள், குளக்கோட்டு மன்னன் காலத்து கல்வெட்டுக்கள், கற்சாசனங்கள், ஏட்டுச்சுவடிகள், அன்னியர் ஆட்சிக்கால சரித்திர வரலாறுகள், பேராசிரியர் வே. அகிலேசபிள்ளை, திரு. செ. குணசிங்கம் போன்ற நம்நாட்டுப் பேரறிஞர்களின் ஆராய்ச்சிக் குறிப்புக்கள், எமது நாட்டைத் தரிசித்த போர்த்துக்கேய தேச பாதிரியார் குவைறோஸ் போன்ற பிறநாட்டு நல்லறிஞர்கள் எழுதிய நூல்களில் கோணேஸ்வரம் பற்றி இடம்பெற்றுள்ள குறிப்புகள் இவ்வாக்கத்தினை வாசகர்கள் ஓர் ஆராய்ச்சி நூலாக ஏற்பதற்கு வழிவகுத்துள்ளது.

இத்தகைய படைப்புக்கள் எமது எதிர்காலச் சந்ததியினர் நம் முன்னோர் அளித்த அருஞ் செல்வங்களை ஆதாரபூர்வமாக அறிந்து கொள்ளவும் அவற்றை கருத்துடனும் உரிமையுடனும் பேணிப்பாதுகாக்கவும் பெரிதும் உதவும் என்பதில் சந்தேகமில்லை. இக் காரணத்திற்காக திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை இந்நூலினை வெளியிட முன்வந்துள்ளது. ''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'' என்னும் குறிக்கோளை தாரக மந்திரமாக கொண்டு இயங்கும் இப் பேரவை இந்து சமய கலாச்சார துறைகளில் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றி வருகின்றது என்பது யாவரும் அறிந்ததே.

இறுதியாக சைவப்புலவர் பண்டிதர் இ. வடிவேல் அவர்கள் எழுதிய ''திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வன்மையும்'' நிச்சயமாக சைவ மக்கள் மனதில் ஓர் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் என்பதிலும் திருக்கோணேஸ்வரம் பற்றிய வரலாற்றினை திரிபுபடுத்தி இலாபம் பெற எண்ணும் சகலரையும் செவ்வனே சிந்திக்க வைக்கும் கருவியாய் அமையுமென்பதிலும் எவ்வித ஐயப்பாடும் இல்லை என்பது எனது கருத்தாகும்.

# சாற்று கவிகள்

அறுமுகவன் அடிபரவும் அருட்புலவன்
பண்டிதர் :- அ. ஆறுமுகம் அவர்கள் (பண்ணாகம்)

1. தெட்சண கைலாயம் தேவாரப் பாடலுறு
சுத்தசிவ புண்ணியத் தொல்பதியை - எத்தனைபேர்
என்னென்ன வண்ணமெலாம் ஏத்தி உரைத்துமதை
இன்னும் அளவிட் டிலர்.

2. கற்றுணர்ந்தோர் கல்வி நிலையங்கள் ஆதரவு
அற்றவரை ஆதரிக்கும் இல்லங்கள் - வற்றாத
அருள்பொழியும் ஆலயங்கள் ஆயவையும் பேசும்
திருக்கோண மாமலையின் சீர்.

3. கோணேஸ் வரத்தொன்மை வண்மைக்
குறிகொண்ட
மானேறு நூலை வகுத்துரைத்தார் - மாண்நீறு
பூசிச் சிவாயநம போற்றி யெனத்தினம்சர்
வேசனைப் போற்றுவடி வேல்.

4. குணமுடையார் வாழ்திருக் கோணமலைச் சைவ
மணங்கமழச் செய்யுமருள் வள்ளல் - பணமிடையார்
ஆயினும் நூல்கள் அளிக்கும் வடிவேலர்
தூய பணி தொடர்க வே.

5. அன்பும் அருளும் அறமும் மிகப்பேணும்
இன்பத் திருமலையீர் இந்நூலை - வந்தித்து
வாங்கிப் படித்துணர்ந்து வாழ்வாங்கு
வாழ்ந்திடுவீர்
சங்குநலம் எல்லாம் இயைந்து.

உ

# முகவுரை

ஒரு நாட்டின் வரலாற்றினை, அல்லது மன்னர்கள், புலவர்கள், அறிஞர் முதலானோரின் வரலாறுகளைக் காலத்துக்குக் காலம் அட்டவணைப்படுத்திச் சாசனங்களாக எழுதிவைக்கும் வழக்கத்தைத் தமிழ்மக்கள் பின்பற்றத் தவறிவிட்டனர் மேலை நாட்டவர்களிடம் இந்த வழக்கம் இருந்துவருகின்றது இதன் அவசியத்தையுணர்ந்த தமிழறிஞர்கள் மிகச் சிரமப்பட்டுப் பழைய வரலாறுகளைத் தேடியாராய்ந்து கிடைத்தவைகளை நேர்சீர் செய்து வரலாற்றுச் சாசனங்களை எழுதிவருகிறார்கள்.

திருக்கோணேஸ்வரம் ஒரு வரலாற்றுச் சுரங்கம் கடந்த பல வருடங்களாக கோணேஸ்வரம் பற்றி அறிவதற்குக் கிடைத்த நூல்களிற் கூறப்பட்டுள்ளனவற்றையும், ஆங்காங்கே முதியவர்கள் செவிவழிச் செய்தியாக அறிந்துவைத்திருந்த விஷயங்களையும், கற்சாசனங்கள், கல்வெட்டுக்கள் கூறுவனவற்றையும், பிறநாட்டவர்களும், பிறமதத்தவர்களும் கூறிய கருத்துக்களையும் ஒருமுகப்படுத்தி ''ஆனையழக்க்'' காண்பது போல ''திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும்'' என்ற சிறு நூலை வருங்காலச் சந்ததியினருக்குப் பயன்படும் வகையில் ஒரு சாசனமாக எழுதியுள்ளேன். தொன்மையுள் மிகப் பழைய வரலாறுகளும், வண்மையுள் மேன்மைச் சிறப்புக்களும் பேசப்படுகின்றன.

ஒரு ஸ்தலத்தின் வரலாற்றினை எழுதும்போது அவ்வத் தலத்துப் புராணங்களை ஆதாரமாகக்கொண்டும் எழுத வேண்டுமென காஞ்சிப் பெரியவர் ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளினார்கள். சுவாமிகளுடைய கருத்தை அருள் ஆணையாகக்கொண்டு புராண வரலாறுகளை இந் நூலில் இடம்பெறச் செய்துள்ளேன்.

திருக்கோணமலை இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. எஸ். அம்பலவாணர் (BSC) அவர்கள் 1982ம் ஆண்டு கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்கு விசேட விருந்

தினராக அழைக்கப்பட்டு வந்திருந்தபோது '' திருக்கோணேஸ்வரத்திற்கும் மேருபருவதத்துக்கும் இடைப்பட்ட பூப்பிரதேசத்தைச் சிவபூமி என்று '' திருமூலர் திருமந்திரத்திற் கூறியிருப்பதாகத் தமது பேருரையிற் குறிப்பிட்டார். மேருமலைக்கும் திருக்கோணமலைக்கும் இடைப்பட்ட பூப்பரப்பை புவியியல்ரீதியாகவும், விஞ்ஞானரீதியாகவும் ஆய்வுசெய்ய வேண்டும் என்று அன்று அவர் கூறினார். அவருடைய கூற்று இந்நூலை எழுதுவதற்கு எனக்கு ஒரு உந்துசக்தியாக உதவியது. அப்பெரியாருடைய கூற்றையும் ஆய்வுசெய்து இந்நூலிற் சேர்த்துள்ளேன்.

1981 ஆம் ஆண்டு தமிழ் நாட்டுக்குச் சென்றிருந்தபோது '' தென்னிந்திய வரலாற்றுப் பேரவைச் செயலாளர் '' திரு. ரி. பி. ஜெகந்நாதன் (3-ம2 பைபாஸ் ரோடு, சேலம். 636182) அவர்களைச் சந்தித்து, தெட்சணகயிலாயம் எனப்படுவது எது? எனபதுபற்றி அவருடன் உரையாடச் சந்தர்ப்பம் கிடைத்தது. திருக்காளத்தி, திருச்சிராமலை இரண்டையும் அவர் தெட்சணகயிலாயம் என்று விளக்கிக் கூறினார். திருக்கோணமலைதான் தெட்சணகயிலாயம் என்பதை நிறுவி முன்னரே நான் எழுதி வைத்திருந்த ஆய்வுக்கட்டுரையொன்றை அன்னாரிடம் சமர்ப்பித்தேன். இவ் விஷயம் விரிவாக இந்நூலிற் கூறப்பட்டுள்ளது. அப்பெரியார் பௌராணிகர் மாத்திரமல்ல பௌதிகவிஞ்ஞான அறிவுபடைத்தவர். அவர் என் கருத்தை ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சியும் தெரிவித்தார். அவருடைய அங்கீகாரத்தையும் இந்நூலை எழுதுவதற்கு ஆதாரமாக எடுத்துக்கொண்டேன்.

கடந்த ஐம்பதாண்டுகளாக இடைவிடாது கோணேஸ்வரத்தைத் தரிசித்து போத்துக்கேசர் கோணஸ்வரத்தை அழிப்பதற்குமுன் குளக்கோட்டு மன்னன் கட்டிய கோவில்களும், ஆலயச் சூழலும், ஸ்தலத்தின் திருவருட் பொலிவும், தெய்வ சாந்நித்தியமும் எப்படி இருந்திருக்கும் என்பதை அககாட்சியில் காட்டியருளவேண்டுமென்று மாதுமையம்பாள் சமேத கோணேசப்பெருமானை இரந்திரந்து வேண்டி வழிபட்டு வந்தேன். எம்பெருமானின் அருள்வெளிப்பாட்டில் அகத்தே கண்ட திருக்கோணேஸ்வரத் தொன்மை, வன்மைக் காட்சிகளையும் இந்நூலில் சேர்த்துள்ளேன். இந்நூலில் கி.பி. 1831 ஆம் ஆண்டு பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கோணேசர் கல்வெட்டுப்பற்றிய விரிவான ஆங்கில அறிக்கை ஒன்றையும் எனது ஆக்கமாகிய

திருக்கோணேசர் போற்றித் திருப்பதிகம், திருக்கோணேசர் அருள்வேட்டற் பதிகம், தென்கயிலைக் கோணேசர் இருவிழிக்கும் ஒளியீந்த திருப்பதிகம் என்பனவற்றையும் பிற்சேர்க்கையாகச் சேர்த்துள்ளேன்.

பௌராணிக மகாஞானியாகிய ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகளின் புராணச் சிந்தனையென்னும் தீபத்தையும், விஞ்ஞானப் பேராசிரியராகிய ஸ்ரீ. எஸ். அம்பலவாணர் (Bsc) அவர்களின் விஞ்ஞானச் சிந்தனையென்னும் தீபத்தையும், வரலாற்றுத் துறை ஆராய்ச்சியாளராகிய ஸ்ரீ. ரி. பி. ஜெகந்நாதன் அவர்களின் வரலாற்றுச் சிந்தனையென்னும் தீபத்தையும் எனது இதயமாகிய தாளியில் ஏற்றிவைத்துக் கோணேசப் பெருமானுடைய திருவருட்பேறாகிய நெய்யை நிரப்பி, தத்துவ கலாநிதி -ராதாகிருஷ்ணன் அவர்கள் கூறிய

"நம்பிக்கை ஏற்படுவது கஷ்டமாக இருக்கலாம் ஆனால் நம்பிக்கையின் அவசியத்திலிருந்து மட்டும் நாம் தப்ப முடியாது"

என்னும் தத்துவக் கோலினால் தீபங்களைத் தூண்டித் தூண்டிப் பிரகாசிக்கச்செய்து இந்நூலினைச் சிறியேன் விளக்கஞ் செய்துள்ளேன்.

"பிழைக்கை வீழினும் பாக்கொள்ளும்" பெருமனம் படைத்த சான்றோர்களின் அன்பையும், ஆதரவையும் மன்னிக்கும் பண்பையும் பணிவுடன் ஏற்று இச்சிறுநூலை மாதுமையம்பாள் சமேத கோணேசப்பெருமானுடைய திருவடிகளில் சமர்ப்பணம் செய்து அமைகின்றேன்.

இந்த நூலைப் பதிப்பிப்பதற்குத் திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளர் திரு. செ. சிவபாதசுந்தரம் அவர்களின் உதவியை நாடினேன். பேரவையின் செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி செயலாளர் அவர்கள் இந்நூலைப் பதிப்பிக்க முழுமனதுடன் ஒப்புதல் தந்தார். எல்லாம்வல்ல கோணேசப்பெருமான் அருளால் கனவு நனவாவதை நினைந்து திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை உறுப்பினர்களுக்கும் மதிப்பார்ந்த பொதுச் செயலாளர் அவர்களுக்கும் திரிகரண சுத்தியோடு நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

திருக்கோணேஸ்வரத்திலிருந்து போத்துக்கேசரால் அழிக்கப்பட்ட மூன்று திருக்கோவில்களின் வடிவமைப்புக்களை புராண இதிகாச வரலாற்றுத் தரவுகளை ஆதாரமாகக்கொண்டு

அடியேன் கற்பனைசெய்து கூறிய சொல்வண்ணங்களைத் தமது கைவண்ணத்தால் ஆலயங்களாக ஓவியப்படுத்தி உதவிய திருமதி. சௌந்தரலெட்சுமி சுப்பிரமணியம் அவர்களுக்கும் ஆசியுரை, அணிந்துரை, சாற்றுகவி முதலியவற்றை நல்கிய சான்றோர்களுக்கும், அழகுற அச்சேற்றி உதவிய ஜெய்ஷான் அச்சகத்தார் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி உரியதாகுக.

" பாக்கியபதி "
15, வித்தியாலயம் ஒழுங்கை,
திருக்கோணமலை.

ஞானசிரோன்மணி,
சைவப்புலவர், பண்டிதர்
**இ. வடிவேல்**